செய்தி வெளியீடு எண்: 479 நாள் : 11.09.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.9.2013) தலைமைச் செயலகத்தில், மறைந்த 66 வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு நிதியுதவி வழங்கும் அடையாளமாக 7 பேருக்கு தலா 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியச் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நலநிதியத்தின் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தால் அவரது சட்டபூர்வ வாரிசுதாரருக்கு அல்லது நியமனதாரருக்கு வழக்கறிஞர்கள் நல நிதியத்திலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2001–ஆம் ஆண்டு முதல் இந்த நிதி உதவி இரண்டு லட்சம் ரூபாய் என மறைந்த வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. மறைந்த வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு வழங்கப்படும் இந்த நிதியுதவியை உயர்த்தி வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் கழகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அக்கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.9.2012 அன்று நடைபெற்ற சென்னை உயர்நீதிமன்றத்தின் 150–வது ஆண்டு நிறைவு விழாவில், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியத்தின் உறுப்பினராக உள்ள வழக்கறிஞர்களின் மறைவின் போது, அவர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சத்து 25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். மேலும், இந்த உதவித் தொகையை இடையூறு இல்லாமல் தொடர்ந்து வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நலநிதியத்திற்கு ஆண்டு தோறும் 4 கோடி ரூபாய் தமிழக அரசின் மானியமாக வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.

தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியச் சட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு செய்த வழக்கறிஞர்களுக்கு அவர்களின் பதிவு காலத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ஒரே

சீராக எந்தவித வகைப்பாடும் இல்லாமல் மறைந்த வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி, மறைந்த 66 வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு தலா 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 3 கோடியே 46 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அவர்களில் 7 வாரிசுதாரர்கள் / நியமனதாரர்களுக்கு நிதியுதவியாக தலா 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு கே.பி. முனுசாமி, தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அரசு தலைமை வழக்கறிஞர் திரு ஏ.எல். சோமயாஜி, உள்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சட்டத் துறைச் செயலாளர் முனைவர் கோ. ஜெயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 11.9.2013